**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) அவர்களின் செயல்முறைகள்**

ந.க. எண்.4088/ஆ5/ 2025. நாள். 20/08/2025

.....

பொருள் : பள்ளிக் கல்வி – செஞ்சுருள் சங்க செயல்பாடுகள் மாணவ / மாணவிகளுக்கான வினாடி வினா போட்டிகள் – தொடர்பாக

பார்வை : வேலூர் மாவட்டம், மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு, மாவட்ட திட்ட மேலாளரின் கடித ந.க.எண்.035/அ2/ DAPCU/2025, நாள். 11.08.2025

.....

பார்வையில் காணும் கடிதத்தில், வாழ்க்கை திறன் கல்வி திட்டத்தின் மூலம் பள்ளிகளில் 8, 9, மற்றும் 11ஆம் வகுப்பு பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு எச்.ஐ.வி/ எய்ட்ஸ், இரத்ததான முகாம், வளர் இளம் பருவம் மாற்றம், மனநலம், போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு அளிக்கவும் மற்றும் வினா வினா போட்டிகளில் கலந்துக் கொள்ளும் பொருட்டு அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 8, 9, மற்றும் 11ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களில் சுமார் 100 மாணவ / மாணவிகளை தேர்ந்தெடுத்து தருமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே வினாடி வினாடி போட்டியில் கலந்துக் கொள்ள விருப்பம் உள்ள 8, 9, மற்றும் 11ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவிகள் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Spreadsheet–ல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும், இப்போட்டியில் வெற்றி பெறும் மாணவ / மாணவியர்களுக்கு முதல் பரிசு ரூ. 5,000/– இரண்டாம் பரிசு ரூ. 4,000/– மூன்றாம் பரிசு ரூ. 3,000/– ஆறுதல் பரிசு ரூ. 2,000/– (ஒருவருக்கு) பரிசுதொகை மற்றும் சான்றிதழகளும் வழங்கப்படும் எனவும், போட்டியில் கலந்துக்கொள்ளும் மாணவர்களுக்கு தலா ரூ.150/– பயணப்படியும், உணவும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அளவிலான வினாடி வினா போட்டியில் கலந்துக்கொள்ள வேண்டும்.

இணைப்பு – Google Spreadsheet Link

https://docs.google.com/spreadsheets/d/1Hz7BXbuezBM5VoouLWV7PG5e_triVAX5rqnYhyaoF8Q/edit?usp=sharing

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்:
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக இணையதளம் மூலாக)

நகல்–

1. மாவட்ட திட்ட மேலாளர்,
   மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு,
   மாவட்ட ஆட்சியரகம், வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)